

தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (13.08.2025) போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில், பயணச்சீட்டு முன்பதிவு செய்யும் பயணிகளை ஊக்குவிக்கும் வகையில், 01/04/2025 முதல் 15/06/2025 வரை முன்பதிவு செய்து பயணம் மேற்கொண்ட பயணிகளில், 75 பயணிகளை "கோடைக் கொண்டாட்டம்" சிறப்பு குலுக்கல் முறையில் தேர்வு செய்தார். இந்நிகழ்வின்போது, போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர் சுன் சோங்கம் ஐடக் சிரு, தமிழ்நாடு பயணியர் மற்றும் பொருள் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் (மு.கூ.பொ) டாக்டர் த.பிரபுசங்கர், மற்றும் போக்குவரத்துக் கழக உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




சென்னை, எழிலகத்தில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில் நேற்று முனி (13.08.2025) அரசு விதிகளுக்கு ஏற்ப தரமான நெல் அரைப்பை உறுதி செய்தல், அரிசி ஈரப்பதம், நிறம், சுத்தம் போன்ற தரச் சான்றுகளை பின் பற்றுதல், பொது விநியோகம் மற்றும் பிற அரசுத் திட்டங்களுக்கு அரிசியை நேரத்திற்குள் வழங்கும் திட்டமிடல் ஆகியவை குறித்து துறை அலுவலர்கள் மற்றும் நெல் அரவை முகவர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மை செயலர் சத்ய பிரத சாகு, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் அ. ஜான் லூயிஸ், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் சு சிவராசு, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பொருளாதாரத்தில் நலிந்த பட்டியலின —

# பிற்படுத்தப்பட்ட சாதியினருக்கும் 10 சதவிகித சலுகையில் இடம் உண்டா?

## மக்களவையில் — கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கேள்வி!

புதுடெல்லி, ஆக.15-

2019 முதல் பொருளாதார ரீதியாக நலிந்த பிரிவினருக்கு ஒன்றிய அரசு 10 சதவீத இட ஒதுக்கீடு சலுகை வழங்கி வருகிறது. ஆனால், இந்தச் சலுகை பட்டியல் இன மற்றும் பழங்குடி சமுதாய மக்களுக்கு வழங்கப்படுவதில்லை. அதைப் போலவே, இந்தச் சலுகை இதரபிற்பட்ட சமுதாய மக்களும் இந்த 10 விழுக்காடு இட ஒதுக்கீட்டில் சேர்க்கப் படவில்லை. இவர்களுக்கு சாதி அடிப்படையில் சமுதாய ரீதியாகவும் கல்வியிலும் பின்தங்கியவர்கள் என்ற காரணத்தால் மட்டுமே இட ஒதுக்கீடு சலுகை வழங்க அரசியல் சட்டம் வழிசெய்கிறது.



ஆனால், பொருளாதார ரீதியாக நலிந்த பிரிவினருக்கு 10 சதவீத இட ஒதுக்கீட்டை 2019 முதல் ஒன்றிய அரசு அளித்து வருகிறது. இதற்கான அரசியல் சட்ட திருத்தத்தையும் ஒன்றிய பாஜக அரசு செய்தது. இந்நிலையில், இந்த பொருளாதார ரீதியான அடிப்படையில் வழங்கப் படும் 10 சதவீத சலுகையில் பொருளாதார ரீதியாக பின்தங்கிய, பட்டியல் சாதியினர், பழங்குடியினர், இதரபிற்படுத்தப் பட்ட சாதியினர் உள்ளிட்ட அனைத்து சமுதாய பிரிவினவருக்கும் வழங்க பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வருகிறது.

இந்நிலையில், இந்த கோரிக்கை தொடர்பான கேள்வி ஒன்றை நாடாளுமன்றத்தில் மக்களவை திமுக குழுத்தலைவர் டி.ஆர்.பாலு எழுப்பினார். இந்த கேள்விக்கு ஒன்றிய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் இணை அமைச்சர் பி.எல். வர்மா நேற்று முன்தினம் (12.8.2025) மக்களவையில் பதிலளித்தார்.

**10 சதவீத சலுகைத் தேர்வர் தகுதி பட்டியல் சாதியினர் தகுதியை விடவும் குறைவானதா?**

பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவினருக்கு வழங்கப்படும் சலுகையில் பட்டியல் சாதி, பழங்குடி மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட சமுதாயப் பிரிவினரும் சேர்க்கப்பட வேண்டும் என்ற வலுவான கோரிக்கையை அரசு அறிந்துள்ளதா? அப்படியானால் அதன் மீதான அரசின் முடிவின் விவரம் என்ன? அரசு இது தொடர்பான கோரிக்கையை ஏற்கவில்லை என்றால் அதற்கான காரணம் என்ன? மேலும், பொருளாதார அடிப்படையில் மட்டுமே அமைந்துள்ள 10 சதவீத இட ஒதுக்கீட்டு சலுகையின் கீழ் தேர்ந்தெடுக்கப் படுபவர்களின் தேர்வு மதிப்பெண் பட்டியல் சாதி மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட தேர்வர்களைவிடவும் கணிசமாகக் குறைவானதாக பல அரசு நியமனங்களில் உள்ளதா?அப்படியென்றால் இந்த நிலையை சரி செய்ய ஒன்றிய அரசினால் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்? என்று பல்வேறு விஷயங்கள் குறித்து தனது கேள்வியில் டீ.ஆர்.பாலு எம்.பி. எழுப்பி இருந்தார்.

**அரசிடம் தரவுகள் இல்லை!**

"2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு சட்டத்தின் 103 வது திருத்தத்தின் அடிப்படையில் பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவை சேர்ந்த வர்களுக்கு அரசுசார் நியமனங்களிலும் கல்வி நிலையங்களிலும் 10 சதவீதம் அளவு வரை இட ஒதுக்கீடு வழங்கப் படுகிறது. இதனை நடைமுறைப்படுத்துவதில் அரசு உறுதிபூண்டுள்ளது. பொருதாரத்தில் நலிவுற்ற பிரிவினர் (இ.டபுள்யூ.எஸ்) நியமனங்கள் தொடர்பான புள்ளி விவரங்கள் துறைவசம் இல்லை"

இவ்வாறு அமைச்சர் வர்மா தெரிவித்துள்ளார்.

### சிறு, குறு, நடுத்தர தொழிற்சாலைகளை நவீனப்படுத்த

# ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளனவா?

## மக்களவையில் — டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஆக.15-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 11 ஆகஸ்ட் 2025 அன்று மக்களவையில், கடந்த பத்தாண்டுகளில் வங்கி துறையில் செயல்படாத சொத்துகளின் மதிப்பு எவ்வளவு என்றும் சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு உரிய கடன் வழங்கப்படுகிறதா? என்றும், டிஜிட்டல் வங்கி பரிவர்த்தனைகள் மேம்படுத்த உரிய முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்றும் கிராமப்புறங்களில் வங்கி கணக்கு வசதிகள் எவ்வளவு துாரம் சென்றடைந்துள்ளன? என்றும், ஒன்றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்திரி அவர்களிடம் கேள்வியை எழுப்பினார்.



ஒன்றிய அரசின் நிதித் துறை இணையமைச்சர் அளித்த பதில் பின்வருமாறு:

கடந்த பத்தாண்டுகளில் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, பஞ்சாப் நேஷனல் வங்கி, பேங்க் ஆப் இந்தியா, கனரா வங்கி மற்றும் யூனியன்பேங்க் ஆப் இந்தியா உள்பட12 வங்கிகளின் வாராக் கடன்களின் மதிப்பு, கடந்த 2015 முதல் 2025 வரை ரூபாய் 8,11,000 கோடிக்கும் அதிகமாக உள்ளது என்றும், வங்கித் துறையின் பணிகளை ஒழுங்கு படுத்தும் வகையில், முறையாக கடன் வழங்குதல், தொழில் நுட்ப வசதிகளை மேம்படுத்துதல், புதிய திவால் சட்டம், பெரிய கடன்களுக்கான தகவல் களஞ்சியம் சுமத்தப் பட்டசொத்துக்களை மீட்பதில் கவனம், தேசிய அனைத்து மறுசீரமைப்பு நிறுவனம் ஆகிய பல்வேறு முயற்சிகளை ரிசர்வ் வங்கி எடுத்து வருகிறது என்றும், தேசிய மயமாக்கப் பட்ட வங்கிகளின் அதிகாரிகளை உரிய முறையில் தேர்வு செய்தல், யுபிஐ மற்றும் நேரடி பலன் பரிமாற்ற முறையில் வங்கியின் நடவடிக்கைகளை கண்காணித்தல், வங்கி கட்ட விதிகள் 2025 அமல்படுத்துதல் என பல்வேறு நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடுத்து வருகிறது என்று இணையமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளுக்கு தேவையான கனரக மெஷின்களை கொள்முதல் செய்ய, கடன் உறுதியளிப்பு திட்டத்தை ஒன்றிய அரசு வங்கித் துறையின் மூலம் செயல்படுத்தி வருகிறது என்றும், இது வரை கடந்த நான்கு ஆண்டுகளில் ரூபாய் ஏழு இலட்சம் கோடிகள் அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது என்றும், அவசர கடன் உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் ஒரு கோடிக்கும் அதிகமான சிறு, குறு நிறுவனங்களுக்கு இதுவரை ரூபாய் இரண்டரை இலட்சம் கோடிகள் அளவிற்கு நிதியுதவி செய்யப்பட்டுள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் கடன் உறுதியளிப்பு நிதியம் என்ற நிறுவனத்தின் மூலம் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சிக்கென ரூபாய் 10 இலட்சம் கோடிகள் அளவிற்கு கடன் வசதி செய்து தரப்பட்டுள்ளதாகவும், டிஜிட்டல் பணம் பரிவர்த்தனைகள் மூலம், ரூபாய் 244 இலட்சம் கோடிகள்அளவிற்கு வங்கித்துறையில் வணிகம் நடந்து வருகிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பிரதம மந்திரியின் ஜன்தன் திட்டத்தின் கீழ் 56 கோடி ஜன்தன் வங்கி கணக்குகளில் ரூபாய் 2,61,882 கோடிகள் அளவிற்கு, வங்கியில் நிதி யுள்ளது என்றும், காப்பீட்டு திட்டங்களின் வழியாக 76 கோடி மக்களுக்கு பயன் கிடைத்துள்ளது என்றும், அடல் ஒய்வூதிய திட்டத்தின் மூலம் எட்டு கோடி மக்களுக்கு பயன் கிடைத்துள்ளது என்றும், பிரதம மந்திரி முத்ரா திட்டத்தின் கீழ் ரூபாய் 35 இலட்சம் கோடிகள் அளவிற்கு கிராமப்புற மக்களுக்கும் பெண்களுக்கும் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது என்று ஒன்றிய இணையமைச்சர் பங்கஜ் சௌத்திரி பதில் அளித்துள்ளார்.

### தமிழ்நாட்டில் உள்ள

# துறைமுகங்களை, சர்வதேசத் தரத்திற்கு மேம்படுத்தும் திட்டம் உள்ளதா?

## மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 15-

நாடாளுமன்ற கூட்டத் தொடரில் கலந்துகொண்டுள்ள தி.மு.க. எம்.பி. இரா.கிரிராஜன், தமிழ்நாட்டில் உள்ள சென்னை, எண்ணூர், தூத்துக்குடி துறைமுகங் களை, பல்வேறு வெளிநாடுகளில் உள்ள துறைமுகங்களுடன் இணைப்பை ஏற்படுத்தும் திட்டத்தை ஒன்றிய அரசு தொடங்கியுள்ளதா? இந்த மூன்று துறைமுகங்களி லிருந்து ஈட்டப்பட்ட மொத்த வருமானம் மற்றும் விரி வாக்கம், மேம்பாட்டிற்காக வழங்கப்பட்ட நிதி எவ்வளவு? எண்ணூர் காமராஜர் மற்றும் கடலூர் துறைமுகங்கள் சாகர் மாலா திட்டத்தின் கீழ் உள்ளதா என்ற கேள்விகளை துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து, நீர்வழிகள் துறை அமைச்சரிடம் எழுப்பியிருந்தார்.



இதற்கு பதில் அளித்துள்ள அமைச்சர் சர்பானந்தா சோனோவால், சென்னை துறைமுகம், எண்ணூர் காமராஜர் துறைமுகம், தூத்துக்குடி வ.உ. சிதம்பரனார் துறைமுகம் ஆகியவற்றுக்கு இடையே பல்வேறு வெளிநாட்டு துறைமுகங்களுடன் இணைப்பை அரசாங்கம் தொடங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

சென்னை துறைமுகம் ஆசியா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, தென் அமெரிக்கா ஆகியவற்றின் முக்கிய துறைமுகங்களுடன் நன்கு இணைக்கப்பட்டுள்ளது என்றும், ஆசியா, ஐரோப்பா, அமெரிக்காவிலிருந்து வழக்கமான சரக்குப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது என்றும் பதில் கூறப்பட்டுள்ளது. மேலும், வர்த்தகத்தை மேம்படுத்தும் வகையில் ரஷ்யா, தாய்லாந்து, வங்காளதேசத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளதாகவும் அமைச்சரின் பதிலில் கூறப்பட்டுள்ளது.

எண்ணூர் காமராஜர் துறைமுகத்தைப் பொறுத்தவரை ஆஸ்திரேலியா, சீனா, சிங்கப்பூர், மலேசியா, கொழும்பு, மத்திய கிழக்கு, தென்னாப்பிரிக்கா, ஐரோப்பா, வட அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச துறைமுகங்களுடன் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தக தொடர்புகளை மேற்கொண்டு வருவதாகவும் பதிலில் கூறப்பட்டுள்ளது.

தூத்துக்குடி வ.உ. சிதம்பரனார் துறைமுகத்திலிருந்து இலங்கையின் கொழும்பு, மாலே, ஐக்கிய அரபு அமீரகம், வியட்நாம், தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், சீனா, இந்தோனேசியா, தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, எகிப்து, ரஷ்யா, மொராக்கோ உள்ளிட்ட பல்வேறு வெளிநாட்டு துறை முகங்களுடன் வழக்கமான போக்குவரத்து இணைப்பை மேற்கொண்டுவருவதாகவும் கூறப்பட்டு ள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் சென்னை துறை முகத்தின் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் ரூ. 6463.24 கோடியாகவும், மூலதனச் செலவினம் ரூ. 306.9 கோடியாகவும் உள்ளதாக விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அதேபோல எண்ணூர் துறைமுகத்திலிருந்து ரூ. 4654.46 கோடி, தூத்துக்குடி துறைமுகத்தி லிருந்து ரூ. 4362.22 கோடி வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாகவும், மூலதனச், செலவினமாக முறையே ரூ. 1898.3 கோடியும், ரூ. 1127.8 கோடியும் செலவிடப்பட்டுள்ளதாக, திமுக எம்.பி. கிரிராஜனின் கேள்விக்கு, ஒன்றிய அமைச்சர் பதில் கூறியுள்ளார்.

இந்தியாவின் துறைமுகங் களை சர்வதேச தரத்திற்கு உயர்த்தி அமைப்பதை நோக்கமாகக் கொண்ட "கடல் மாலைத் திட்டம்" என்கிற "சாகர் மாலா திட்டத்தின்" கீழ் சென்னை, எண்ணூர், கடலூர் துறைமுகங்களின் ஆறு திட்டங்களுக்கு மொத்தமாக ரூ. 463.80 கோடி நிதி உதவி வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும், அதில் ரூ. 233.62 கோடி விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் ஒன்றிய அரசின் அமைச்சரின் பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு குனியமுத்தூர் பேருந்து நிலையம் முன்பு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் சி.ஆர்.ராமச்சந்திரன், பா.அருண்குமார், தீர்மானக்குழு இணைச்செயலாளர் முத்துச்சாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம், மாவட்ட துணை செயலாளர் அசோக் பாபு, பொருளாளர் ரகுமான், பகுதி கழக பொறுப்பாளர்கள் பகுதி கழக செயலாளர் சி.லோகநாதன், கார்த்திக், கே.செல்வராஜ், மு.ராஜேந்திரன், ஜெயலாபுதீன், சிவசக்தி, கேபிள் மணி உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### திருவாரூர் மாவட்டத்தில் 714 கடைகள் மூலம் 363 வாகனங்களில்

# 34,197 நபர்களுக்கு 'தாயுமானவர்' திட்டத்தில் ரேஷன் பொருட்கள் விநியோகம்!

## பூண்டி.கே.கலைவாணன் - நா.இளையராஜா பங்கேற்பு!

திருவாரூர், ஆக.15-

முதலமைச்சர் அவர்கள், சென்னையிலிருந்து காணொலி காட்சி வாயிலாக கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் தாயுமானவர் எனும் சரித்திர சிறப்புவாய்ந்த திட்டத்தினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, திருவாரூர் மாவட்டம், தெற்கு வீதி நியாய விலைக்கடை அருகில் வசிக்கும் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களுக்கு நகரும் வாகனத்தை கொடி அசைத்து துவக்கி வைத்து , அத்தியாவசிய பொருள்களை பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பயனாளிகளுக்கு வழங்கினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன்,தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வாரிய கழகத்தலைவர் நா.இளையராஜா , நகர் மன்றதலைவர் புவனப்ரியா, பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், நகர்மன்ற துணைத் தலைவர் அகிலா சந்திரசேகர், நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ் மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் இரா.சங்கர் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

இத்திட்டத்தின் மூலம் திருவாரூர் மாவட்டத்திலுள்ள கூட்டுறவுத்துறையின் கீழ் செயல்படும் கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் 714 ரேசன் கடைகள் மூலம் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று 363 எண்ணிக்கையிலான நகரும் வாகனங்களைக் கொண்டு அரிசி, சர்க்கரை, கோதுமை, துவரம்பருப்பு, பாமாயில் உள்ளிட்ட ரேசன் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதனால் 34,197 எண்ணிக்கையிலான வயது முதிர்ந்த மற்றும் மாற்றுத்திறனாளி பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

திருவாரூர் மாவட்டம் முழுவதிலும் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் வார்டு கிளைக் கழகங்களின் நடைபெற்ற தாயுமானவர் திட்ட விநியோக நிகழ்வுகளில் மாவட்ட ஒன்றிய நகர, பேரூர், கழக நிர்வாகிகள் அரசு அலுவலர்கள் கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

100வது பிறந்த நாள்



கழக அமைப்புச் செயலாளர்
ஆர்.எஸ்.பாரதி அவர்களின் தாயார்
திருமதி ஜே.விஜயலட்சுமி ராமன்
பிறந்த நாள்: 15.8.1925 ❖ மறைந்த நாள்: 27.7.2001
100வது பிறந்த நாளில் நினைவு கூரும்
திருமதி. சௌதாமினி சாய் பிரசாத்
ஆர். சாய் சுந்தர் - திருமதி கீதா சாய் சுந்தர்
ஆர்.எஸ். பாரதி- டாக்டர் திருமதி சம்பூர்ணம்
டாக்டர் சாய் மோகன் - திருமதி பத்மலட்சுமி
திருமதி சாய் காமாட்சி - டாக்டர் சுப்ரமணியம்
திரு. ஞானசேகர்
மற்றும் பேரன், பேத்திகள் - கொள்ளுப் பேரன்,பேத்திகள்